~~257~~

செ.வெ.எண் 232

# பத்திரிக்கை செய்தி

நாள்: 25/03/2017

---------

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் நாகர்கோவில் மீன்பிடித்துறைமுக திட்ட கோட்டம் செயற்பொறியாளர் அலுவலக கட்டுப்பாட்டில் காலியாகவுள்ள 3 அலுவலக உதவியாளர் பணியிடத்தை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்கவேண்டும், மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்கவேண்டும். வயது வரம்பு 01.01.2017 அன்றைய நிலையில் 1) பொது பிரிவு (முன்னுரிமை பெற்றவர், வயது 18 லிருந்து 30 -க்குள்), 2) ஆதிதிராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர் - ஆதரவற்ற விதவை, வயது 18 லிருந்து 35 க்குள்), 3) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் (முன்னுரிமை பெற்றவர், வயது 18 லிருந்து 32 க்குள்) ஆகியோர் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களாகும். மேலும் இவர்கள் இப்பணிகளுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைத்து சமர்ப்பிக்கவேண்டும். இப்பணிக்கான விண்ணப்பங்களை செயற்பொறியாளர், மீன்பிடித்துறைமுக திட்டகோட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகம், நாகர்கோவில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10-04-2017 மாலை 5 மணிக்குள் கீழ்காணும் முகவரியில் சமர்ப்பிக்கவேண்டும்.

<u>முகவரி :</u>

செயற்பொறியாளர் அலுவலகம்,
மீன்பிடி துறைமுகத் திட்டகோட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
நாகர்கோவில்.

22-3-17

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

2/2

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்